**சியம்பலாண்டுவ பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 07 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூலை 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சியம்பலாண்டுவ பிரதேச சபையின் நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் பேணப்படுகின்ற கொங்கிரீட் சிறுகற்கள் உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் உற்பத்தி செய்யப்பட்ட 14,627 கொங்கிரீட் சிறுகற்களின் இறுதியிருப்பின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் உற்பத்திக்காக ஈடுபடுத்தப்பட்ட எஞ்சிய மூலப்பொருள் இருப்பின் பெறுமதி ரூபா 107,975 ஆக இருந்ததுடன் அந்த அளவு இறுதியிருப்பாக கணக்கு வைக்கப்படாமல் மீளாய்வாண்டின் செலவினமாகக் கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) கமநெகும செயற்திட்டத்தின் கிழ் சியம்பலாண்டுவ இலங்கை வங்கியில் பேணப்படுகின்ற 70361364 ஆம் இலக்க சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் மீதி ரூபா 779,095 ஆக இருந்த போதிலும் அது ரூபா 708,104 எனக் கணக்கு வைக்கப்பட்டமையினால் ரூபா 70,991 தொகை குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,027,500 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 9,393,815 ஆக இருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 8 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஊழியர் கடன்களிலிருந்து ரூபா 37,299 தொகை நீண்ட காலமாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 3,623,248 கூட்டுத்தொகையான 03 சொத்து விடயங்களையும், ரூபா 24,676,721 தொகையான பொறுப்பு விடயத்தையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) | 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 26,181,723 கூட்டுத்தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை |
| (ii) | 136 ஆம் பிரிவு | சபைக்குரிய கடைகளுக்கான வாடகையை மதிப்பிட்டுத் திணைக்களத்திலிருந்து மதிப்பீடு செய்துகொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,689,691 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,166,375 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வாடகை**

சபைக்குரிய 80 கடைகள் வாடகை உடன்படிக்கைக் காலஎல்லையை விஞ்சியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் உடன்படிக்கையை நாளது வரையாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் எதிமலையில் 05 கடைகள் வாடகையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கடைகளின் வாடகை உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 ஏனைய வருமானம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் செயற்பாடுகளுக்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட அல்லது அந்தச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஹொட்டேல் / தங்குமிடங்களிலிருந்து உரிய ஆண்டிற்கு முன்னைய ஆண்டின் பெறுவனவுகளிலிருந்து 1 சதவீதத்தை விஞ்சாத கட்டணமொன்றை உபவிதிகளை விதித்து உள்ளூராட்சி நிறுவனங்களினால் அறவிடப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தங்குமிடங்களிலிருந்து அவ்வாறு கட்டணத்தை அறவவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் | 1,029,500 |
| முத்திரைக் கட்டணம் | 2,319,560 |

**2.2.4 மிகை அறவீடு**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 759,593 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு செயற்திறனின்மை**

(அ) 2013 மே 17 ஆந் திகதி சமனலபெத்த சமூர்த்திச் சங்கத்திற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் ரூபா 82,500 பெறுமதியான 3000 கொங்கிரீட் சிறுகற்கள் கடன் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இத்தொகையை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய கடிதத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் வீதி விளக்குகளை அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான சேவை வழங்குனராக சபை செயற்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 268,725 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் வீதி விளக்குகளை அமைக்கும் போது அமைக்கும் முறை, பொருத்தப்பட வேண்டிய விளக்கு வகை, எண்ணிக்கை போன்ற தகவல்கள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 4. பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் ஆண்டின் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்